# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கரூர்

**முன்னிலை – திரு.எஸ்.பி.பரத் குமார், M.B.A.,L.L.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

**2026 ம் வருடம், மார்ச் மாதம், 11 ம் நாள், புதன் கிழமை**
**குற்றவியல் பல்வகை மனு எண். 62/2026**

பிரபாகரன் (34/26)

த/பெ. பொன்னுசாமி

மனுதாரர் / 3 ம் நபர் / வழக்கு சொத்தின் உரிமையாளர்

/ எதிர் /

தமிழக அரசுக்காக,

காவல் உதவி ஆய்வாளர்,

தாந்தோணிமலை காவல் நிலையம்,

(குற்ற எண். 422/2025) எதிர்மனுதாரர் / குற்றமுறையிடுபவர்

**உத்தரவு**

1. மேற்படி வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்தினை மனுதாரர் / வழக்கு சொத்தின் உரிமையாளரின் இடைக்கால பாதுகாப்பில் ஒப்படைக்க வேண்டுமென கோரி BNSS பிரிவு 497 r/w 503– ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. தாந்தோணிமலை காவல் நிலைய குற்ற எண்.422/25 பிரிவு 140(3), 115(2), 126(2), 127 BNS என்ற வழக்கில், வழக்கு சொத்தான TN 81 X 3443 SILVER COLOR CAR கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்கு சொத்து மனுதாரருக்கு உரிமையானது என்றும், மேற்படி வழக்கு சொத்தை மனுதாரரின் இடைக்கால பாதுகாப்பில் ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்க கோரி மனுதாரர் மனுவில் கோரியுள்ளார்.

3. அரசு தரப்பிற்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. மேற்படி பதில் அறிவிப்பில், மேற்படி வழக்குச் சொத்தை மனுதாரரிடம் ஒப்படைக்கும்பட்சத்தில் வாகனத்தை விற்கவோ, அடகு வைக்கவோ, உருமாற்றம் செய்யவும் கூடும் என்பதாலும், வழக்கின் மேல்

நடவடிக்கைக்காக நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டியிருப்பதாலும் வழக்கு சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க கடும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான TN 81 X 3443 SILVER COLOR CAR நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, ஆர்.பி.எண். 138/2026 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மனுச் சொத்து மனுதாரருக்கு உரிமையானது என்பது வழக்காவணங்களை ஆய்வு செய்கையில் தெரிய வருகிறது. மேற்படி சங்கதியை எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கவில்லை. மனுதாரர் தனது அன்றாட தேவைகளுக்காக பயன்படுத்தி வருவதாகவும், வாகனத்தை பயன்படுத்தாமல் ஒரே இடத்தில் வைத்திருந்தால் மதிப்பிழந்தும், பழுதாகிவிடவும்கூடும் என்று தெரிய வருகிறது. ஆகவே, மேற்படி வழக்குச் சொத்தை மனுதாரரிடம் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, இடைக்கால பாதுகாப்பில் வழங்க உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:–</u>

1. மனுதாரர் / வழக்கு சொத்தின் உரிமையாளர் ரூ.7,00,000/–(ரூபாய் ஏழு லட்சம் மட்டும்)க்கு பிணைப் பத்திரத்தை ஒரு ஜாமீன்தாரர் ரூ.7,00,000/–க்கு நிறைவேற்ற வேண்டும்.

2. ஜாமீன்தாரர் தனது புகைப்படம் மற்றும் இடது கட்டைவிரல் பதிவை ஜாமீன் பத்திரத்தில் ஒட்ட வேண்டும், மேலும் அவர் தனது தொலைபேசி எண்ணுடன் ஆதார் அட்டையின் நகலையும் சமர்ப்பிக்க வேண்டும்.

3. மனுதாரர் / வழக்கு சொத்தின் உரிமையாளர் பஞ்சநாமா எழுதித்தரவேண்டும்.

4. மனுதாரர் / வழக்கு சொத்தின் உரிமையாளர் மேற்படி வழக்குச் சொத்தான நான்குசக்கர வாகனத்தை நீதிமன்றம் வேண்டும்போது ஆஜர்படுத்த வேண்டும். நான்கு சக்கர வாகனத்தின் அசல் ஆர்.சி. புத்தகத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

5. மேற்படி வழக்குச் சொத்தை புகைப்படம் எடுத்து நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும். புகைப்படம் பெற்ற பிறகு பிணைப் பத்திரம் எழுதி தரவேண்டும். மேலும், அதற்கான செலவுத் தொகையை மனுதாரரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

6. வழக்கு முடியும் வரை மேற்படி நான்கு சக்கர வாகனத்தை உருமாற்றமோ, விற்கவோ கூடாது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 11 ம் நாளாகிய இன்று அவையறிய என்னால் பகரப்பட்டது.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**